**Volume: 5** **Issue: 8** **Pages: 52-56**




# The Light of Truth Denoted the Lord's Sacred Dance
# உண்மை விளக்கம் குறிப்பிடும் நாதன்நடம்

**[*1] Dr. S Gothandaraman**

[*1] Associate Professor, PG & Research, Department of Tamil, Thiru VI.KA. Government Arts College, Thiruvarur, Tamil Nadu, India.

**Article Info.**
**E-ISSN: 2583-6528**
**Impact Factor (QJIF): 8.4**
**Peer Reviewed Journal**
**Available online:**
**www.alladvancejournal.com**

**Received:** 12/July/2026
**Accepted:** 16/Aug/2026

**Abstract**
*Unmai Vilakkam* ("Light of Truth/Clarification of Reality"), composed by Manavasakam Kadanthar in the 13th century CE, is one of the fourteen foundational *Siddhanta Shastras* of Tamil Shaiva Philosophy. Presented as a dialogue between a seeker and a spiritual preceptor, the text elucidates core metaphysical categories—the 36 *tattvas*, the soul (*Pasu*), bondage (*Pasa*), and the Supreme Reality (*Pati*). Central to its exposition is the philosophical interpretation of Lord Shiva's Sacred Cosmic Dance (*Ananda Tandava*) at Chidambaram. The text reveals how the rhythmic dance physically manifests the divine Light of Truth, driving the fivefold cosmic functions (*Pancha Kritya*) to dispel spiritual darkness (*Anava*) and bestow eternal liberation (*Mukti*).

***Corresponding Author**
**Dr. S Gothandaraman**
Associate Professor, PG & Research, Department of Tamil, Thiru VI.KA. Government Arts College, Thiruvarur, Tamil Nadu, India.

**Keywords:** Unmai Vilakkam (உண்மை விளக்கம்), Siddhanta Shastras (சித்தாந்த சாஸ்திரங்கள்), Shaiva Siddhanta (சைவ சித்தாந்தம்), Manavasakam Kadanthar (மனவாசகம் கடந்தார்), Ananda Tandava (ஆனந்தத் தாண்டவம்), Pati-Pasu-Pasa (பதி-பசு-பாசம்), 36 Tattvas (முப்பத்தாறு தத்துவங்கள்)

## Introduction

இறைவன் எல்லாப் பொருட்களையும் தன்னுள் அடக்கிக்கொண்டு நிற்கின்ற பெரும் பொருளாக உள்ளான். அவனது பெரு நிறைவை எவ்வாறு உணர்ந்து கொள்வது என்பதற்கு, "நமக்குத் தெரிந்த பொருள்களிலே மிகவும் பெரியது வானமே. வானம்தான் எல்லாப் பொருள்களுக்கும் இடம் தந்து நிற்கின்றது. நிலம், நீர், தீ, காற்று முதலியவற்றைத் தன்னகப்படுத்தி நிற்கின்றது. எண்ணற்ற கோள்களையும் விண்மீன்களையும் தன்னுள்ளே தாங்கி நிற்கின்றது. அந்த வானைப் போல இறைவன் எல்லாவற்றையும் தன்னுள்ளே அடக்கிக் கொண்டு நிற்கின்றான். எல்லாவற்றிற்கும் தானே ஆதாரமாக நிற்கின்றான். எல்லாவற்றையும் அவனே செயற்படுத்துகின்றான். இதனால், அவனே மேற்பொருள் என்பது விளங்கும்"(ஆனந்தராசன் உரை.ப.01) என்பாரது விளக்கம் தெளிவுச்செய்யும். இறைவன் இல்லாத இடம் எதுவும் இல்லை. அவன் பார்க்குமிடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரணப் பொருள். அவன் எங்கும் இருக்கின்றான் என்பதை,

> "எங்குள் உளன் ஒருவன் காணுங் கொல் என்றஞ்சி
> அங்கம் குலைவது அறிவு" (நீதிநெறிவிளக்கம். 94)

என்ற நீதிநெறி விளக்கத்தாலும் அறியலாம். இவ்வாறு மேற்பொருள், இடைப்பொருள், கீழ்ப்பொருள் என்ற முப்பொருளுள்

மேற்பொருளாக விளங்கும் இறைவனின் திருநடன அருட்கூத்தை உண்மை விளக்கம் என்னும் இந்நூலின்வழி ஆராய்கின்றது இக்கட்டுரை.

## உண்மை விளக்கம்

முப்பொருள்களை விளக்கிக் கூறும் சித்தாந்தச் சாத்திரங்கள் பதினான்கு. அவற்றுள் ஒன்று உண்மை விளக்கம். இது சித்தாந்த உண்மைகள் அனைத்தையும் மிகச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எடுத்துக் கூறுவதோடு மட்டுமல்லாமல் சித்தாந்தத்தினை அறிய விரும்புவோர் தொடக்க நிலையில் கற்பதற்கு ஏற்றவகையில் அமைந்துள்ளது. எந்த ஒரு பொருளாக இருந்தாலும் அதனை இரண்டு நிலைகளில் வைத்து அறிய முற்படுவோம். ஒன்று அதன் பொதுத்தன்மையை மட்டும் உணர்வது. மற்றொன்று அதன் உண்மையை உணர்வது.உண்மை என்பதற்கு வடமொழியில் தத்துவம் என்பர். பொருள்களது உண்மையை உணர்விப்பவைத் தத்துவச் சாத்திரங்கள். அத்தகைய தத்துவச் சாத்திரமாகிய இந்நூல் முப்பொருள்களது உண்மையை நன்கு விளக்குவது ஆகலின் உண்மை விளக்கம் என்னும் பெயர் பெற்றது என்பர்.(ஆனந்தராசன், உரை,ப.05) மேலும் இதனை,

The author tries to expound in these few pages, the truth of the Sacred Agamas, without going into argumentation, just so much as is sufficient for the aspirant after spiritual Truth, to bring the teaching into actual daily practice. They are in the form of questions addressed to the Teacher St. Meykandan and answers elicited from him.(J.M.Nallasvami Pillai, Studies in saiva Siddhanta, p.05)

புனித ஆகமங்களின் உண்மையை வாதங்களுக்குச் செல்லாமல், ஆன்மீக சத்தியத்தை விரும்புவோர்க்குப் போதனையை உண்மையான தினசரி நடைமுறைக்குக் கொண்டு வருவதற்குப் போதுமானது என்பதை ஆசிரியர் விளக்க முயற்சிக்கின்றார். இது தன் ஆசிரியர் மெய்கண்டாரிடம் கேட்கப்பட்ட கேள்விகளாகவும் அவரிமிருந்து பெறப்பட்ட பதில்களாகவும் உள்ளன என்பதை அறியமுடிகின்றது.

## உண்மை விளக்கம் ஆசிரியர்

இந்நூலினை இயற்றியவர் மணவாசகங் கடந்தார் என்பவர். அவர்கள் சந்தான முதற்குரவராகிய மெய்கண்ட தேவரின் மாணாக்கருள் ஒருவர். மற்றொருவர் அருணந்தி சிவனார். எனவே மனவாசகங்கடந்தார் அவருக்கு ஒரு சாலை மாணாக்கர் ஆவார்.

"..its author is said to be Tiruvadigai Manavasagam Kadandar, one of the 49 disciples of St. Meykandan. That he was a native of Tiruvadigai and a pupil of St. Meykandan is certain, but there are no other particulars available about his life-history. That he must have been an advanced sage is evident from the name (காரணப்பெயர்) he bears, which means "he who has passed beyond thought and speech.". (J.M.Nallasvami Pillai, Studies in saiva Siddhanta, p.05)

இவரைப் பற்றிய வரலாறு பெரியதாக இல்லை என்றாலும் திருவதிகை தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள பண்ருட்டி என்னும் ஊரினராக இருத்தல் வேண்டும். இவரது காலம் மெய்கண்டார் வாழ்ந்த காலமாகிய கி.பி. 13 ஆம் நூற்றாண்டு என்பது வெள்ளிடைமலை. இவர் சொல்லுக்கும் சிந்தனைக்கும் அப்பாற்பட்ட தவச்சீலராக இருந்திருக்க வேண்டும் என்பது எண்ணத்தக்கது.

முப்பொருள்களை வரிசைப்படுத்தி அமைத்துக்கூறும் முறையில் நூலாசிரியர்கள் வேறுபடுகின்றனர்.

- முதலாசிரியராகிய மெய்கண்ட தேவர் தமது சிவஞான போத நூலில் முப்பொருள்களைப் பதி, பாசம், பசு என முதலில் நிறுத்திப்பின் எதிர்வரிசையில் பசு, பாசம், பதி என வைத்து விளக்கிக் கூறினார்.
- அவர்தம் தலைமாணாக்கராகிய அருணந்தி சிவானர் சிவஞான போதத்திற்கு வழி நூலாகத் தாம் செய்த சிவஞான சித்தியாரில் தமது ஞானாசிரியர் மேற்கொண்ட முறையையே தாமும் பின்பற்றி அப்படியே அமைத்துக்கொண்டார்.
- இவர்களுக்குப் பின்னர் வந்த உமாபதி சிவனார் தாம் இயற்றிய சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகிய இரு நூலிகளிலும் பதி, பசு, பாசம் என்ற வரிசை முறையினையே மேற்கொண்டார்.
- மனவாசகங்கடந்தார் பாசத்தை முன் வைத்துப் பாசம், பசு, பதி என்ற முறையில் வரிசைப்படுத்தி விளக்கிச்சொல்வது புதியதொரு போக்காகும்.

இவ்வாறு ஆசிரியர் கூறுவதற்கான காரணத்தைப் பின்வரும் சான்று புலப்படுத்தி நிற்கின்றது.

"முப்பொருள்களைப் பதி முதலாக எடுத்துச் சொல்வது மேலிருந்து கீழ் நோக்கிச் செல்லும் முறையாகும். பாசத்திலிருந்து எடுத்துச் சொல்வது கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் முறையாகும். கீழ் உள்ள பொருட்கள் மேல் உள்ள பொருளை விடப் பருமனானவை. ஆதலால் எளிதில் விளங்கக் கூடியவை மேல் உள்ள பொருள்கள் நுண்மையாவை. ஆதலால் விளங்கிக் கொள்வதற்கு அரியவை."(ஆனந்தராசன் உரை, ப.6)

முப்பொருள்களின் இயல்புகளை ஏனைய சாத்திரங்களும் விளக்குகின்றன. அவற்றையே உண்மை விளக்கமும் விளக்குகிறது. ஏனைய சாத்திரங்களில் விளக்கப்படாத ஒரு பேருண்மையை உண்மை விளக்கம் விளக்கிக்

காட்டுகின்றது. அதுவே அம்பலவாணர் ஆடும் அருட்கூத்தின் உண்மையாகும். நடராச தத்துவத்தை இந்த நூலினைப் போல வேறெந்த நூலும் சிறப்பாக எடுத்துக்கூறவில்லை எனலாம். இதுவே இந்த நூலின் தனிச்சிறப்பாகவும் திகழ்கின்றது.

### மாணவர் கேட்கும் வினாக்கள்

நூலாசிரியர் தன் குருநாதரிடம் கேட்கும் வினாக்களாகப் பின்வரும் உண்மை விளக்கம் பாடல் அமைகின்றது.

“ஆறாறு தத்துவம் ஏது ஆணவம் ஏது அன்றேதான்
மாறா வினைஏது மற்றிவற்றின் – வேறாகா
நான்எது நீஏது நாதன்நடம் அஞ்செழுத்துத்
தான்ஏது தேசிகனே சாற்று.”(உண்மை விளக்கம் பா.03)

1. முப்பத்தாறு தத்துவங்களின் இயல்பு யாது?
2. ஆணவத்தின் இயல்பு யாது?
3. தொன்றுதொட்டு ஆணவத்தோடு தொடர்ந்து நீங்காமல் வரும் வினையின் இயல்பு யாது?
4. இத்தத்துவங்கள், ஆணவம், வினை ஆகியவற்றிற்கு வேறாகாமல் அவற்றோடு கூடி ஒற்றுமைப் பட்டு வரும் என் இயல்பு யாது?
5. என் அறியாமையை நீக்கி உண்மையை உணர்த்த வந்தருளிய நும் இயல்பு யாது?
6. இறைவன் இயற்றும் நடனத்தின் இயல்பு யாது?
7. திருவைந்தெழுத்தின் இயல்பு யாது?
8. முத்தியின் இயல்பு யாது?

குரு முதல்வரே இவற்றிற்கு விளக்கம் கூறியருள்வீராக என்று மாணவர் ஆசிரியர் மெய்கண்டாரிடம் இவ்வினாக்களை எழுப்புகின்றார். இவற்றில் முதல் ஐந்து வினாக்கள் பாசம், பசு, பதி ஆகிய முப்பொருள்களின் இயல்பு பற்றியன என்பது புலனாகும். பாசம் நமக்குத் தெரிந்த பொருளாதலின் அதனை முன் வைத்தார். இவற்றின் வேறாகா நான் என்றதனால் அப்பாசத்தோடு கூடி அதன் வசப்பட்டிருக்கின்ற பசுவை அடுத்து வைத்தார். குருவாகி வந்து உண்மையை உணர்த்திப் பாசத்தினின்றும் விடுவிக்கின்ற பதியை அதன் பின் வைத்தார் என இவ்வாறு பொருத்திப்பார்க்கலாம். பின் ஆறாவது வினா நாதன் நடம் பற்றியது. இறைவன் செய்யும் ஐந்தொழிலே நடனம் எனப்படுதலின் அதுவும் பதியின் இயல்பாய் அமைதலின் அதுபற்றிய வினாவை ஐந்தாம் வினாவிற்குப் பின் வைத்தது பொருத்தமாய் இருத்தலைக் காணமுடிகின்றது.

### நாதன் நடம் யாது? What is the Lord's Sacred Dance?

உண்மை விளக்கம் நூலில் நாதம் நடம் பற்றி ஆசிரியர் 31 முதல் 38 வரை உள்ள எட்டுச் செய்யுட்களில் விளக்குகின்றார். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பதற்கிணங்க அனைத்தும் அசைய வேண்டி அவன் அசைகின்றான் என்று கூறலாம். அவனது அசைவையே ஆடல் என்றும் கூத்து என்றும் உயர்ந்தோர் குறிப்பிட்டனர் எனலாம். நல்ல தவம் செய்தவர் காணும்படி நாதத்தின் முடிவில் திருவைந்தெழுத்தால் திருவுருக் கொண்டு சிவபெருமான் திருக்கூத்தினை இயற்றுவான். திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியுள்ள மெய்கண்ட நாதரே அத்திருக்கூத்தின் இயல்பை அடியேன் உள்ளவாறு அறியும் வகையில் அதனை விளக்கியருள வேண்டும் (O Meykancja Natha, graciously expound so that I may understand the nature of the Sacred Dance with the sound of the five letters seen by the sages.) என்று மாணவர் விண்ணப்பிக்கின்றார்.

### இறைவன் ஆடும் இடம்

எட்டும் இரண்டும் உருவான லிங்கதே என்றதனால் அவன் ஆடும் இடம் இன்னது என்பதைப் புலப்படுத்துகின்றார். லிங்கம் என்பதற்கு அடையாளம் அல்லது குறி என்பது நேர் பொருள். இங்கு அச்சொல் ஆதாரம் அல்லது இடம் என்ற பொருளில் வந்தது.எட்டும் இரண்டும் உருவான இடமே அவன் ஆடல் புரியும் இடமாகும். இவ்வாறு மறைபொருளாக வைத்து உணர்த்தினார் ஆசிரியர். எட்டும் இரண்டும் என்பது நம்நாட்டில் வழங்கி வரும் ஒரு பழைய வழக்கு. இதனை,

பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை
எட்டினோடு இரண்டும் அறியேனையே
(திருவாசகம்.49)

என்று திருவாசகம் குறிப்பிடுவதை அறியலாம். எட்டும் இரண்டும் என்பதற்குச் சைவ சித்தாந்தத்தில் சொல்லப்படும் பொருளைக் காணலாம். இதனை,

“எட்டும் இரண்டும் கூடியது பத்து. பத்து என்னும் எண்ணைக் குறிக்கும் எழுத்து “ய” என்பது. திருவைந்தெழுத்தில் ய என்னும் எழுத்து உயிரைக் குறிக்கும். ஆகவே, எட்டும் இரண்டும் உருவான லிங்கத்தே என்பது, பத்தின் அறிகுறியான ய என்னும் எழுத்தால் குறிக்கப்படும் ஆன்மாவாகிய இடத்தில் எனப் பொருள்படுவதாயிற்று.”(ஆனந்தராசன் உரை, ப.147)

என்பார் கருத்தினால் தெளியலாம். உடம்பெங்கும் உயிர் இருப்பினும் இரண்டு இடங்களை உயிர் சிறப்பாகப் பற்றி நிற்கும்.

அவ்விடங்களாவன இதயம், புருவநடு என்பன.இதற்கான அறிவியல் சான்று இல்லை என்றாலும் பழங்கால உடற்கூற்றியியலாளர்களும் த்துவவாதிகளும் இதனை நம்பினர். (Ancient anatomist and philosophers believed the soul was in the lungs, heart, pineal gland, or brain. In the Ancient tradition of yoga, the soul is located in the crown chakra at the top of the head.wikipedia) எனவே உயிர் சிறப்பாகப் பொருந்தி நிற்கும் இந்த இரண்டு இடங்களிலும் இறைவனது நடனம் நடைபெறுகின்றது. உயிரின் அறிவு நிலைத்து நிற்கும் இதயத்திலும் விளக்கம் பெற்றுத்திகழும் புருவ நடுவிலும் அவ்வறிவை இடமாகக் கொண்டு உயிரை நிலைப்பித்தும் அறிவித்தும் இறைவன் நடம் புரிகின்றான் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஆடுதற்கு எடுத்துக்கொள்ளும் உருவம்

ஆடுதற்குக் கொள்ளும் உருவம் எது என்பதற்குச் சிவாயநம என்னும் திருவெழுத்து அஞ்சாலே என்கின்றார். எனவே திருவைந்தெழுத்தைத் திருமேனியாகக் கொண்டு இறைவன் நடனம் புரிகின்றான் என்பது விளங்கும்.(The Supreme Intelligence dances in the soul formed of the letter ya, with a Form composed of the five letters Si, va, ya, na, ma, for the purpose of removing sins) ஆன்மாவின் அறிவு தொழிற்படுவதற்கு இன்றியமையாத் துணையாய் இருப்பது நாதம். நாதத்தில் தோன்றுவன மந்திரங்கள். அம்மந்திரங்களை இறைவன் தனக்கு வடிவமாகக் கொள்வான். அம்மந்திரங்களுள் சிறந்தது திருவைந்தெழுத்து என்பதால் அதனையே தனக்குத் திருமேனியாகக் கொண்டு திகழ்கின்றான். (Hear now how the Dance is performed! In His feet is na; in his Navel is ma; in His shoulders is Si; in his face is va; in his Head is ya)

| வ.எ | தூல பஞ்சாக்கர வடிவம் | சூக்கும பஞ்சாக்கர வடிவம் |
|---|---|---|
| 1. | இறைவனின் திருவடி - நகாரம் | உடுக்கை ஏந்திய திருக்கை - சிகாரம் |
| 2. | இறைவனின் வயிறு - மகாரம் | வீசிய திருக்கை – வா காரம் |
| 3. | இறைவனின் தோள்கள் – சி காரம் | அபயத்திருக்கை – ய காரம் |
| 3. | இறைவனின் முகம் – வா காரம் | நெருப்பு ஏந்திய திருக்கை – ந காரம் |
| 4. | இறைவனின் திருமுடி – ய காரம் | முயலகனை அழுத்தும் திருவடி – ம காரம் |

நகரம் முதலாக அமையும் தூல பஞ்சாக்கர வடிவத்தை உணர்த்துகின்றது. இவ்வாறு கண்டு வணங்குவார்க்கு உலகப் பயனே விளைவதாகும். கூத்தப்பிரானது திருவுருவத்தில் உடுக்கை, வீச்சு, அமைப்பு, நெருப்பு என்னும் இவைகளையுடைய நான்கு கைகளையும் ஊன்றிய திருவடியையும் முறையே சி, வா, ய, ந, ம என்னும் எழுத்துக்களாகக் கண்டு வணங்க வேண்டும் என்கின்றது. சிகாரம் முதலாக அமையும் சூக்கும பஞ்சாக்கர வடிவத்தை விளக்குகின்றது.

### ஓங்காரமும் இறைவன் திருவுருவும்

இந்த உலகத்தைப் பொருள் உலகம் என்றும் சொல் உலகம் என்றும் இரு வகையாகப் பகுக்கலாம். இவற்றுள் பொருள் வடிவாய் உள்ளவை, புவனம், தத்துவம், கலை என்பன. இவற்றைப் பொருள் உலகம் எனலாம். ஒலி வடிவாய் வழங்கும் பல வகை மொழிகள் சொல் உலகம் எனலாம். இந்தச் சொல் உலகம் எழுத்து, சொல், சொற்றொடர் என மூன்று நிலைகளைக் கொண்டது. எழுத்தை வடமொழி ஐம்பத்தொன்று என்று கூறும். ஐம்பத்து மூன்று என்ற வழக்கும் அங்குண்டு. இவ்வெழுத்துக்களுள் அனைத்து மொழிகளின் எழுத்துக்களும் அடங்கும் என்னும் கருத்தினால் இவற்றை மாதிருகாக்கரங்கள் (தாய் எழுத்துக்கள்) என்று குறிப்பிடுவர். சொல்லுலகம் அனைத்து மொழிகளுக்கும் மூலமாக இருப்பது நாதம் ஆகும். நாதம் ஓம் என்னும் குறியீட்டால் குறிக்கப்படும். அதனால் அது ஓம் காரம் எனப்படும்.

ஓங்காரமே நல் திருவாசி உற்றுஅதனில்
நீங்கா எழுத்தே நிறைசுடராம் ஆங்காரம்
அற்றார் அறிவர் அணி அம்பலத்தான்
ஆடல்இது
பெற்றார் பிறப்பு அற்றார் பின். (உண்மை
விளக்கம்.செ.34)

என்ற பாடல் இனிது விளக்கும். இதில் ஓம் என்னும் பிரணவமே அவனைச் சூழ்ந்துள்ள திருவாசியாகும். அப்பிரணவத்தில் தோன்றிய அக்கரங்கள் ஐம்பத்தொன்றும் திருவாசியில் விளங்கும் சுடர்களாகும். முதல் ஒலியாகிய ஓங்காரம் திருவாசியுள் அவ்வோங்காரத்தின் உள்ளொளியாய் விளங்கி நிற்பவன் கூத்தப்பெருமான். அவனது கூத்தின் இயல்பை யான் எனது என்னும் செருக்கு அற்றவரே அறிவர். அவ்வாறு அறிந்து வழிபடும் பேறு பெற்றவர் பின் பிறவாத நிலையைப் பெற்றவர் ஆவர். (The arch over Sri Nataraja is Omkara; and the akshara which is never separate from the omkdra is the Filling Splendour. This is the Dance of the Lord of Chitambara. They understand this who have lost their self (Ahankara). Understanding, they leave their births behind.)

ஓங்காரம் ஐந்து கூறுகளை உடையதாகச் சொல்லப்படும். அவை, 1. அ, 2.உ, 3. ம், 4. விந்து, 5. நாதம் என்பன. இவற்றில் முதலில் உள்ள மூன்றும் நம் செவியால் உணரப்படும். அகரம்

முதலியன இல்லை என்றாலும் அகரம் முதலியவற்றோடு ஒத்த தன்மை உடைமையால் அவையும் அகரம் முதலியனவாகவே ஒப்புமை பற்றிக் கூறப்படுகின்றன. இவற்றைச் சூக்கும பஞ்சாக்கரம் என்று குறிப்பிடுவர். இறைவன் இவ்வாறாக நின்று அந்தக் கரணங்களை இயக்கிப் பொருள் உணர்வைத் தருகின்றான் என்பது பற்றி மாணிக்கவாசகர்,

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற, மெய்யா" என்று அருளிச்செய்கின்றார்.

இறைவனின் திருவுருவில் தோன்றும் குறிப்பானது, உடுக்கையால் ஒலியை உண்டாக்குதல் படைத்தல் தொழிலையும், அபயத்திருக்கரம் காத்தல் தொழிலையும் நெருப்பை ஏந்தியிருத்தல் அழித்தல் தொழிலையும் உறுதியாக முயலகன் மேல் ஒரு காலை ஊன்றியிருத்தல் மறைத்தல் தொழிலையும் மற்றொரு காலை உயரத் தூக்கியிருத்தல் அருளல் தொழிலையும் உணர்த்தும். (Creation starts from the Drum. Protection proceeds from the Hand of Hope. The Fire produces Destruction. From the Foot holding down proceeds Tirobhava; the Foot held a loft gives mukti.) என்பதைக் குறிப்பிடுகின்றார்.

திருக்கூத்தினைத் தரிசிக்கும் முறையைப் பற்றியும் குறிப்பிடுகின்றார். இதனை,

மாயை தனைஉதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கிஅருள் தான் எடுத்து நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தான் அழுத்தல்
தான்எந்தை யார்பரதம் தான். (உண்மை விளக்கம்.செ.36)

என்ற பாடலில் குறிப்பிடுகின்றார். By these means, Our Father scatters the darkness of maya, burns the strong karma, stamps down mala (Anava) and showers grace, and lovingly plunges the soul in the Ocean of Bliss. This is the nature of His Dance. துடியை அசைத்தல் பக்குவம் எய்திய உயிரின் உணர்விலிருந்து மாயையை உதறி விலக்குவதாகும். நெருப்பை ஏந்தியுள்ள கை அவ்வுயிரைத் தொடரும் வலிய வினையைச் சுடுவதாயிருக்கும். ஊன்றிய திருவடி ஆணவ மலத்தை வலிகெட்டு நிற்கச்செய்வதாகும். எடுத்த திருவடி பிறப்பு இறப்புகளில் சுழன்று வந்த அவ்வுயிரை அந்நிலைகளினின்றும் உயர்த்தி அருள் நிலையில் வைப்பதாகும். எடுத்த அத்திருவடியின் வளைவும், அதனைக் காட்டி நிற்கும் வீசிய கையும் யான் எனது என்னும் செருக்கு அற அடங்கி நில் என்னும் பொருள்பட அமைந்த திருக்கையும் உயிரைப் பேரின்பத்தில் அழுத்தும் குறிப்பு உடையவை என்பதை அறியமுடிகின்றது.

மேலும், இறைவன் மோனம் ஆகிய முடிநிலையில் நிற்கும் சிறந்த முனிவர்கள் மும்மல வாதனையை முற்றிலும் நீக்கி, தற்போதம் அற்ற நிலையில் விளங்கித் தோன்றும் பேரின்பமாகிய அமுதத்தைக் கண்களாலும் மொண்டு அருந்தும் படியாக வெளியே திருச்சிற்றம்பலத்துள் புலப்பட நின்று ஆடுகின்றான் என்கின்றார். (The Silent Jnanis, destroying the three kinds of mala establish themselves where their selves are destroyed. There they witness the Sacred Dance filled with Bliss. This is the Dance of the Sabhdndtha whose very form is Grace.) நிறைவாக உரைக்கும் உணர்வுக்கும் எட்டாத ஒப்பற்ற முதல்வன் ஐந்தெழுத்தால் அருளுருக் கொண்டு அருளே தனக்கு அரங்காகக் கொண்டு அவ்வருளேயான உமையம்மை காணும்படி நின்று ஆடும் திருக்கூத்தை மேற்கூறிய முறையில் உணர்ந்து விரும்பித் தொழுவார்க்குப் பிறவியில்லை என்று தன் ஆசான் கூறுவதாக இந்நூலாசிரியர் எடுத்தியம்புகின்றார். இவ்வாறாக, தில்லையம்பதியில் திருநடம் செய்யும் ஈசனின் தன்மை யாது எனக் கேட்டு அதற்கு ஆசான் தரும் பதிலாக மேற்கண்ட எட்டுப் பாடல்களின் தொகுப்பினை ஒரு பருந்து பார்வையாக இக்கட்டுரை நோக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**References**


1. மெய்கண்ட சாத்திரம் மூலமும் உரையும், கா.சுப்பிரமணியபிள்ளை, சாரதா பதிப்பகம், 2021
2. சி சிவபூசை விளக்கம், வஸ்ரீ ச.குமாரசுவாமிக்குருக்கள்,சிவானந்தகுருகுலம், 1965
3. சைவ சித்தாந்தமும் விஞ்ஞான உலகமும், தனபாக்கியம், மணிமேகலை பிரசுரம், 1990.
4. சைவசித்தாந்தம் மறுபார்வை, சோ.கிருஷ்ணராஜா, பூபாலசிங்கம் புத்தகசாலை, 1998.
5. சைவசித்தாந்தம் கூறும் தத்துவங்களும் தாத்துவிகங்களும், இ.நமசிவாயம், காந்தளகம், 1997.
6. சிவஞான போத மூலமும் ஸ்ரீமத் கோ.வடிவேல் செட்டியாரவர்கள் இயற்றிய சிற்றுரையும், தாளையான் அச்சகம், 1971.
7. உண்மை விளக்கம், ஆனந்தராசன் உரை.
8. நீதிநெறி விளக்கம், காசிமடம், திருப்பனந்தாள், 1950
9. The tiruvacagam, Rev.G.U.Pope,Oxford at the Clarendon Press, 1900 Studies in Saiva-Siddhanta, M.J.Nallasvami Pillai, Madras at the Meykandar Press, 1911.